நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

The Secretariat, Colombo 01,
Sri Lanka

அலுவலகம் Office (94)-11-2484500 (94)-11-2484600 (94)-11-2484700
பெக்ஸ் Fax (94)-11-2449823
வெப் சைட் Website www.treasury.gov.lk

எனது இல. My No. BD/CBP/4/1/2-2020
உமது இல. Your No.
திகதி Date 2019.09.24

வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல: 5/2019

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

2019 வருடத்தின் எஞ்சிய காலப்பகுதியின் போது அரச செலவினத்தினை முகாமைசெய்தல்

2019 வரவு செலவுத்திட்ட உரையின் 212 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கமைவாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள் போன்ற அனைத்து செலவின முகவராண்மைகளுடனும் கலந்துரையாடியதன் பேரில் 2019 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மூலதனச் செலவினத்தில் 15 சதவீதம் ஏற்கனவே சேமிக்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக 2019.04.08 ஆந் திகதிய 03/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

02. ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதலினைத் தொடர்ந்து நாட்டில் பாதகமான பொருளாதார நிலைமை காணப்படுகின்ற சூழ்நிலையில் அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான நெருக்கடிகளைக் கவனத்திற்கொண்டு, 2019 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த மூலதனச் செலவினத்தில் 10 சதவீதத்தினை கட்டாயமாக சேமிக்க வேண்டுமென மேலும் தேவைப்படுத்தப்பட்டது.

03. இப்பின்னணியில், முன்னுரிமையல்லாத இயல்புடைய மற்றும் இதுவரை ஆரம்பிக்கப்படாத வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக் கருத்திட்டங்கள் உள்ளடங்களாக தளபாடம், அலுவலக உபகரணங்கள் போன்ற அத்தியவசியமற்ற பொருட்களினை கொள்வனவு செய்தல் என்பவற்றை இனம்கண்டு அவற்றை அடுத்த வருடத்திற்கு பிற்போடுவதன்பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. மேலும், 2018.07.16 ஆந் திகதிய 03/ 2018 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் கீழ் வாகனங்கள் கொள்வனவு மறு அறிவித்தல்வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், கொள்வனவு செய்வதற்கு உடன்பட்டு உடன்படிக்கை இதுவரை செய்யப்படாதவை உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

04. இந்தவகையில், இவ்வருடத்தின் மீதமுள்ள காலப்பகுதிக்கான காசுப்பாய்ச்சலினை முகாமை செய்வதற்கு பொதுத் திறைசேரிக்கு இயலுமான வகையில், அனைத்து செலவின முகவராண்மைகளும் 2019 இன் அடுத்த 03 மாதங்களுக்கான (ஒக்டோபர் - டிசெம்பர்) செலவினத் திட்டத்தினை 2019 செப்ரெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்: ஆர்.எச்.எஸ். சமரதுங்க
திறைசேரியின் செயலாளர்

பிரதி: கணக்காய்வாளர் நாயகம்